1979 மார்ச் 23] [திரு. மு. கருணாநிதி]

சுமத்த நான் தயாராக இருக்கிறேன். முதலமைச்சரிலிருந்து இன்னும் 5, 6 அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டுகளை சுமத்த என்னிடத்தில் குற்றப் பட்டியல் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் அனுமதியைப் பெற்று ஒரு ஸ்பெஷல் கோர்ட் போடுங்கள். வெளி மாநில நீதிபதியைப் போடுங்கள். அங்கே இந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் தருகிறேன். அங்கே அவைகள் நிரூபிக்கப்படவில்லை என்றால் நான் ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவகாரங்கள் தொடர்ந்து எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் ஸ்பெஷல் கோர்ட் என்கின்ற அளவில் முக்கியமான தனிப்பட்டவர்கள் சிலரை பழிவாங்குகின்ற முறையில் ஏற்படுத்து வதை புறக்கணித்து டெல்லியில் எங்கள் ஆட்சேபணையை தெரிவித்து அங்கே ஜனதாவை எதிர்த்து வாக்களித்திருக்கிறோம், தனிப்பட்டவர்களுக்காக இதை உருவாக்கக் கூடாது என்று நாங்கள் வாக்களித்திருக்கிறோம். ஆகவே ஒட்டுமொத்தமாக அங்கே கொடுக்க இருப்பதையெல்லாம் நிச்சயமாக பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களிடமோ — ஜனாதிபதியிடமோ கொடுக்கலாம்.

பிரதம அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கலாம்; அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். ஜனாதிபதி அவர்களுக்குக் கொடுக்க லாம்; அவர்களும் நடவடிக்கை எடுப்பார்கள். வேண்டுமென்றால் எங்களை டிஸ்மிஸ் செய்யலாம், ஆதாரம் இருந்தால். எனவே, தயவுசெய்து, உடனடியாக இந்தக் கருத்தினை அவர்கள் எழுத வேண்டும், பிரதம அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு, சாட்சியங்களோடு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

1. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (திரு. ஜே. ஜேம்ஸ், மற்றும் இரு எதிர்க் கட்சித் தலைவர்கள் பேச முற்படல்) ஜேம்ஸ், நோ. நேரமாகி விட்டது. நான் அனுமதிக்க இயலாது. இப்படியே வளர்ந்து கொண்டிருக்கு மானால், சபையின் மற்ற நிகழ்ச்சிகள் என்ன ஆவது? மன்னிக்க வேண்டும். நான் அனுமதிக்க இயலாது.

1978—79 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றிருக்கிறது:—

[பேரவைத் தலைவர்] [1979 மார்ச் 23

## MESSAGE

"In pursuance of Article 203 clause (3) of the Constitution of India, I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1978–79".

## (6) 1978—79ஆம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1978—79ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையின் மீது பொது விவாதமும், மேற்படி ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும். இதற்கென மணி நேரம் ஒதுக்கப்பெற்றுள்ளது.

திரு. மணிமாறன்....

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் பிரிவிலெஜ்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ.

திரு. ஜே. ஜேம்ஸ்: The Chief Minister has given a wrong information.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ. நீங்கள் சொல்லியாகி விட்டது. 'ராங் இன்பர்மேஷன்' என்று. அதற்குமேல் விவாதிக்க இயலாது. நீங்கள் எழுப்பிய பிரிவிலெஜ் என் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதைப்பற்றி பிறகு முடிவு சொல்கிறேன். திரு. மணிமாறன்.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 1978—79ஆம் ஆண்டு இறுதி துணை மதிப்பீட்டினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் அளித்தார்கள். நான் சார்ந்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த துணை மதிப்பீட்டில் அதிகமாக கோடிட்டுக் காட்டியிருப்பது, வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களைப் பற்றிய குறிப்பை வைத்திருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில் நீலகிரி மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் தான் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த இரண்டு

(பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாவட்டங்கள்தான் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனவா? மழையினால் பாதிக்கப்பட்டனவா? மற்ற மாவட்டங்கள் பாதிகப்படவில்லையா? மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு தெளிவாகத் தெரியும்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதுசமயம்

1979 மார்ச் 23]

| | | |
|---|---|---|
| ஷை | 56 காட்டுவள மூலதனச் செலவு | 1,71,22 |
| ஷை | 57 பல்வகை மூலதனச் செலவு .. | 13,86,72 |
| | மொத்தம்—B. மூலதனக் கணக்கு.. | 20,43,63 |

C. கடன்களையும், முன்பணங்களையும் வழங்குதலும், கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

| | | |
|---|---|---|
| கோரிக்கை | 58 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும். | 1,11,42,87 |

(நண்பகல் 12—00)

(1) அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவை தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## (1) அறிவிப்பு—தொடர்ச்சி.

### (ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1971–72-ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையின் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது :—

"In pursuance of Article 203, clause (3) of the Costitution of India, I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Excess Expenditure for the year 1971–72".

## (8) 1971–72 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "1971–72ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1979 மார்ச் 20ஆம் நாள் இட்ட அறிவிப்பில் இரண்டாவது வரிசையில் 3 முதல் 45 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே மூன்றாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1971–72 ஆம் நிதி ஆண்டிற்கான மிகைச் செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகைகள் வழங்கப்பெற்றன.

நிறைவேற்றப்பெற்ற 1971–72ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| (1) | | (2) | (3) (ரூபாய்) |
|---|---|---|---|
| கோரிக்கை | 3 | பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் .. | 6,10,040 |
| | 6 | மாநிலச் சட்ட மன்றம் .. | 25,608 |

## 1. அறிவிப்பு—தொடர்ச்சி.

### (ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு" அறிமுகம் செய்ய அதினுமகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## (1) அறிவிப்பு—தொடர்ச்சி.

### (ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1979–80 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

'In pursuance of Article 203, clause (3) of the Constitution of India, I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1979–80.